செய்தி வெளியீடு எண். 170 நாள் : 27.03.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில், ரிசர்வ் வங்கி வழிகாட்டுதலின்படி பத்து ரூபாய் நாணயங்களை வாங்க மறுப்பவர்கள் குறித்த புகார்களை 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

இந்திய ரிசர்வ் வங்கியின் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளவாறு திருவள்ளூர் மாவட்டத்தில், பத்து ரூபாய் நாணயங்களை வணிக நிறுவனங்கள், ஆட்டோ, பேருந்து, சந்தைகள் ஆகிய இடங்களில் பத்து ரூபாய் நாணயங்களை வாங்கி கொள்ள தடையேதுமில்லை. மறுப்பவர்கள் தொடர்பான புகார்களை மாவட்ட ஆட்சியரகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறைக்கு 1077 என்ற எண் மூலமாக புகார்களை அளிக்கலாம். இந்த புகார் தொடர்பாக புகார் அளிப்பவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~